காலை முரசு

பக்கங்கள் 21

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 08 ஞாயிற்றுக்கிழமை 24.08.2025 | அதிர்வு 23

## "நாட்டுக்காகவே செயற்பட்டேன்"

### இப்படி ரணில் தெரிவிப்பு



"நான் தனிப்பட்ட காரணங்களுக்காக அல்ல, நாட்டுக்காகவே செயற்பட்டேன்." – என்று முன்னாள்

03

# அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் ரணில்

கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் சிறைச்சாலை வைத்தியசாலையில் இருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை அளவு மற்றும் மிகுந்த சோர்வு காரணமாக ரணில் விக்கிரமசிங்க அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ரணில் விக்கிரமசிங்க கொழும்பு தேசிய

03



# நாட்டை மீட்ட தலைவரை சிறையில் தள்ளுவதா?

## ரணிலின் கைதுக்கு எதிராக அலி சப்ரி போர்க்கொடி



"நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கிய சந்தர்ப்பத்தில் நாட்டைச் சரிவில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவே மீட்டார். அப்படியான ஒரு தலைவரை அரசியல் ரீதியில் பழிவாங்கும் வகையில் சிறையில் அடைப்பதா?

- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமைக்கு அலி சப்ரி கடும் எதிர்ப்பு வெளியிட்டுக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

03

# ரணிலுக்குப் பிணை வழங்குவதை எதிர்த்தமைக்குச் சுமந்திரன் கண்டனம்

"பாரிய குற்றங்களுக்காக அரச தலைவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். எவரும் சட்டத்துக்கு மேலானவர்கள் இல்லை. ஆனால், நீதிமன்றத்தில் முன்வைத்த குற்றத்துக்காக ரணில் விக்கிரமசிங்கவை ஒரு வெள்ளிக்கிழமை கைது செய்து பிணை வழங்குவதை எதிர்த்தமை என்பது முறையான ஆலோசனை அற்றதாகவே தோன்றுகின்றது ."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் கைது தொடர்பில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்திலேயே சுமந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.






நிறைவேற்று அதிகாரத்துடன் நாடாளுமன்றத்திலும் அசுர பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றி இருக்கும் தேசிய மக்கள் சக்தி அந்த அதீத வலிமை காரணமாக எதேச்சாதிகார திசையை நோக்கித் திரும்பலாம் என்ற அச்சம் பலதரப்பிலும் இப்போது நிலவுகிறது.

எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டுக் கூட்டாக இயங்கினால் மட்டுமே தேசிய மக்கள் சக்தியின் உத்தேச எதேச்சாதிகார போக்கை முகம் கொடுத்துச் சமாளித்து நிலைமையை நேர் சீர் பண்ணலாம் என்ற சூழ்நிலை.

ஆனால் எதிர்த்தரப்புகளை ஒன்றிணைத்து, எதிரணிகளின் பலமான செயற்பாட்டுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான தேவையும்

03

# எம்மை இனவாதிகள் என விமர்சித்துக்கொண்டு தொடர்ந்து ஆட்சியில் இருக்க முயற்சிக்காதீர்கள்!

## சபையில் சாணக்கியன் எம்.பி. சாட்டையடி

"எம்மை இனவாதிகள் என்று விமர்சித்துக்கொண்டு தொடர்ந்து ஆட்சியில் இருக்க முயற்சிக்காதீர்கள். எம் மக்கள் உண்மையைத் தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின்போது வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றிய தாவது,

"சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க உரையாற்றுகையில் இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையின் விடயங்களைச் சுட்டிக் காட்டியிருந்தார். அரசு குறிப்பிடுவதை ஏற்காவிடின் ஆணையாளரின் அறிக்கையைப் பாருங்கள் என்று குறிப்பிட்டார். ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையைச் சபை முதல்வர் திரிபுபடுத்தி சபையில் விடயங்களை முன்வைத்தார்.

பொய்யை மாத்திரம் முன்னிலைப் படுத்திச் செயற்படும் அரசு இவ்வாறு திரிபுபடுத்திப் பேசுவது ஒன்றும் ஆச்சரியத்துக்குரியதல்ல. ஆணையாளரின் அறிக்கையில் 2 மற்றும் 3ஆம் பக்கங்களில். "அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாகவும், அதற்கு மாற்றீடாக பிறிதொரு சட்டத்தைக் கொண்டு வரப்போவதில்லை என்றும் குறிப்பிட்டிருந்தது. இருப்பினும் பயங்கரவாதத் தடைச் சட்டம் தற்போதும் பயன்பாட்டில் உள்ளது. அத்துடன் மாற்றீடு சட்டத்துக்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சபை முதல்வர் இதனைப் பார்க்கவில்லையா?

பெருந்தோட்டப் பகுதிகளில் ஏழ்மை தீவிரமடைந்துள்ளது. மலையக மக்களுக்கு 2 ஆயிரத்து 138 ரூபா சம்பளம் வழங்குவதாக தேசிய மக்கள் சக்தி வாக்குறுதி அளித்தது.

கடந்த அரசு 1350 ரூபா சம்பளம் தொடர்பான தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது தேசிய மக்கள் சக்தியின் 3 உறுப்பினர்களும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இன்று 2 ஆயிரம் ரூபா பற்றி எவ்வித முன்னேற்றமும் இல்லை. ஆகவே, பெருந்தோட்ட மக்கள் பற்றி ஆணையாளரின் அறிக்கையில் குறிப்பிட்ட விடயங்களைப் பாருங்கள்.



சபை முதல்வர் குறிப்பிடுவதைப் போன்று ஆணையாளரின் அறிக்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம், பெருந்தோட்ட மக்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான அடக்குமுறை பற்றி ஆணையாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழன் பத்திரிகையின் ஆசிரியர் சிவராஜாவின் தாயாருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. பத்திரிகை ஆசிரியர் சிவராஜா கொழும்பில் உள்ளார். ஊரில் உள்ள அவரது தாயாரிடம் "உங்களின் மகனின் பேஸ்புக் பக்கத்தைப் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். அவரை கவனமாக இருக்கச் சொல்லுங்கள்" என்று அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஊடகவியலாளர் குமணன் ரி.ஐ.டியால் விசாரிக்கப்பட்டுள்ளார். "விசாரணைகளின்போது கேட்கப்பட்ட விடயங்களை வெளியில் சொல்ல வேண்டாம், அவ்வாறு சொன்னால் பார்த்துக்கொள்கின்றோம்" என்று குமணனுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் தமக்கு ஆதரவளித்துள்ளார்கள் என்று சபை முதல்வர் குறிப்பிடுகின்றார். மக்களாணை நாடாளுமன்றத் தேர்தலுடன் முடிவடைந்துவிட்டது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கில் தோல்வியடைந்துள்ளீர்கள். டக்ளஸ் தேவானந்தாவுடன் ஒன்றிணைந்து நாங்கள் எந்த அதிகார சபைகளிலும் ஆட்சியமைக்கவில்லை. ஆனால், நீங்கள் பிள்ளையானுடன் ஒன்றிணைந்து மட்டக்களப்பில் ஆட்சி அமைத்துள்ளீர்கள். வெட்கம் என்ற ஒன்று உங்களுக்கு இல்லையா? பிள்ளையானுடன் ஒன்றிணைந்து வாகரை பிரதேச சபையில் ஆட்சி அமைத்துள்ள கட்சி என்று நீங்கள் வெட்கம் அடையுங்கள்.

எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, ஜீவன் தொண்டமான், ரிஷாத் பதியுதீன் ஆகியோரை விமர்சித்தீர்கள். ஆனால், அவர்களுடன் ஒன்றிணைந்து ஆட்சியமைத்துள்ளீர்கள். வெட்கம் என்பது உங்களுக்கு இல்லையா?!

தேசிய உரிமையைக் கோரும் எம்மை இனவாதிகள் என்று விமர்சிக்கும் நீங்கள்தான் உண்மையான இனவாதிகள். ஆகவே, கண்ணாடி அறையில் இருந்துகொண்டு கல்லெறியாதீர்கள்.

காணிப் பிரச்சினைக்கு என்ன தீர்வை இந்த அரசு வழங்கியுள்ளது. பலாலி மற்றும் மயிலிட்டி இராணுவ முகாம்களுக்குள் இருந்த இரண்டு கத்தோலிக்கத் தேவாலயங்கள் உடைக்கப்பட்டுள்ளன. மயிலிட்டி காணிக்கை மாதா தேவாலயம், பலாலி புனித செபஸ்டியன் தேவாலயம் என்பனவே உடைக்கப்பட்டுள்ளன. அத்துடன் அந்தப் பகுதியில் பிள்ளையார் கோயில் உடைக்கப்பட்டுள்ளது. காணி விடுவிப்புக்கான கோரிக்கை தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகின்ற நிலையில் யாழ். தையிட்டி பகுதியில் தனியார் காணியில் போராட்டத்துக்கு மத்தியில் விகாரை ஒன்று கட்டப்பட்டுள்ளது. நீதி எங்கு செயற்படுத்தப்படுகின்றது?

எம்மை இனவாதிகள் என்று விமர்சித்துக் கொண்டு தொடர்ந்து ஆட்சியில் இருக்க முயற்சிக்காதீர்கள். எம் மக்கள் உண்மையைத் தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள்." – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

சாத்தியப்பாடும் நிலவும் இத்த சமயத்தில், அந்த முயற்சியை முன்னெடுக்க வேண்டிய கடப்பாட்டிலும் பொறுப்பிலும் இருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அந்த விடயத்தில் விட்டேத்தியாக, பொறுப்பின்றி செயற்படுகின்றார் என்ற விசனம் எதிர்க்கட்சித் தரப்புகள் மட்டத்தில் பெரும் எரிச்சலாக நிலவுகின்றது எனத் தெரிகின்றது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்தமை மற்றும் அதனை ஒட்டி எழுந்த உணர்வு வெழுச்சியை சரியாகப் புரிந்து கொண்டு, அதனை வசமாகப் பயன்படுத்தி, எதிர்க்கட்சிகளின் கூட்டு இயக்கம் ஒன்றைக் கட்டமைக்க சரியான தருணம் இது என்று கூறப்படுகிறது.

எதிர்க்கட்சிகளின் பல்வேறு தரப்புகளில் இருந்தும் அத்தகைய எதிர்பார்ப்புக்கான நம்பிக்கை பிறந்துள்ள போதிலும், அது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அலட்டிக் கொள்ளவே இல்லை என்று கூறப்படுகின்றது.

சிங்கப்பூரிலிருந்து நேற்றுக் காலை நாடு திரும்பிய சஜித் பிரேமதாஸ, நாட்டில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைதானமையை அடுத்து எழுந்துள்ள அரசியல் சூழ்நிலையை சரியாகப் புரிந்து கொள்ளாமல், தம் பாட்டுக்குக் கொழும்புக்கு வெளியே அரசியல் கூட்டம் என்று புறப்பட்டுச் சென்று விட்டார் என எதிர்க்கட்சி தரப்புக்கள் மட்டத்தில் அதிருப்தி நிலவுகிறது.

ரணில் விக்கிரமசிங்க கைதை அடுத்து எழுந்துள்ள சூழ்நிலையை புரிந்து கொள்ளாமல், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று காலையில் சிறைச்சாலை வைத்தியசாலையில் போய் ரணில் விக்கிரமசிங்கவை ஒப்புக்குச் சந்தித்து, நலன் விசாரித்து விட்டு, அங்கிருந்து புறப்பட்டு அரசியல் கூட்டம் என்ற பெயரில் ஒரு சந்திப்புக்காக தெரணியகலவுக்கு பயணமாகிவிட்டார்.

தலைநகரில் சில எதிர்த்தரப்பு பிரதிநிதிகள் நாட்டில் ரணில் கைதை அடுத்து எழுந்துள்ள அரசியல் சூழ்நிலையை எதிர்கொள்வதற்காக எதிர்க்கட்சிகள் மட்டத்தில் கூட்டுறவுக்கான வாய்ப்புக்களை ஆராய்வதற்குரிய சந்திப்பிற்கு எதிர்க்கட்சித் தலைவரைத் தேடினால் அவர் தலைநகருக்கு வெளியே என்று அவரின் தரப்பிலிருந்து பதில் கூறப்படுகின்றது.

ஏற்கனவே நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவும், சஜித் பிரேமதாஸவும் தங்களுக்குள் இணக்கம் காணத் தவறியமையால்தான் ஆட்சி அதிகாரம் தேசிய மக்கள் சக்தியின் கையில் முழுமையாக வீழும் அவலம் நேர்ந்தது.

அதைப் படிப்பினையாக உணர்ந்து கொண்டும் கூட, திருந்தும் நோக்கம் சஜித் பிரேமதாஸவுக்கு இல்லை என்று எதிர்க்கட்சி அரசியல் பிரமுகர்கள் கூறுகிறார்கள்.

“பல தரப்புகளையும் ஒன்றிணைத்து, வலுவான எதிர்க்கட்சிக் கூட்டு ஒன்றை உருவாக்கத் திராணியற்ற சஜித் பிரேமதாஸ, தமது வாழ்க்கை முழுவதும் இந்த ‘எதிர்க்கட்சித் தலைவர்’(?) என்ற இப்போதைய பதவியோடு திருப்தி அடைய வேண்டியதுதான்!’ – என ஒரு முக்கிய எதிர்க்கட்சியின் தலைவர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

* * *

‘சண்டே லீடர்’ பத்திரிகையின் ஆசிரியரும் புலனாய்வு விவகாரங்களில் முன்னணி ஊடகவியலாளருமான லஸந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டமை மற்றும் ஊடகவியலாளர் கீத் நொயர் மோசமாகத் தாக்கப்பட்டமை ஆகியவை குறித்து நடைபெற்ற விசாரணைகள் பூர்த்தி அடைந்துள்ளன என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

அந்தப் புலன்விசாரணைகளின் கோவைகள் சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்குகளைத் தொடுப்பதற்காக இப்போது சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்திக் காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு ‘டிரயல் அட் பார்’ நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதாகவும் அவர் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

உண்மைதான். யுத்த காலத்தில் தென்னிலங்கைச் சிங்கள ஊடகவியலாளர்களுக்கு எதிராக இடம் பெற்ற கொடூரங்கள் குறித்து நேர்சீரான – உண்மையான – நீதியான – உறுதியான – காத்திரமான – புலன்விசாரணைகள் நடைபெறுகின்றன. குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தி, தண்டனை வாங்கிக் கொடுக்கும் பொறுப்பு கூறல் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

ஆனால் யுத்தக காலத்தில் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட கொடூரங்கள் தொடர்பில் மட்டும் எந்த முன்நகர்வும் இல்லை.

அந்த ஊடகவியலாளர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் ‘பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளாக’ அர்த்தப்படுத்தப்பட்டு, அவற்றுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் வழமை போல பொறுப்பு கூறல் நிலை நிறுத்தப்படாமல், தண்டனை விலக்களிப்பு சலுகையோடு கைவிடப்பட்டு விட்டன என்பது தெளிவாகின்றது.

அச்சமயத்தில் வெள்ளை வானில் கடத்தப்பட்டு, மோசமான அவலங்களை எதிர்கொண்டு, உயிருடன் மீண்ட ஒரே பத்திரிகையாளனாக நானே சாட்சியத்திற்கு இருக்கிறேன். என் விடயத்தில் கூட நீதி – நேர்மையான புலன் விசாரணை நடக்கவே இல்லை.

நல்லாட்சி அரசு அதிகாரத்திற்கு வந்த போது, அப்போதைய அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்தின “வெள்ளை வானில் கடத்தப்பட்டு உயிருடன் மீண்ட ஒரே ஒரு பத்திரிகையாளராக வித்தியாதரன் உயிரோடு இருக்கிறார். அவரிடம் இருந்து இந்த வெள்ளைவான் கடத்தல் பற்றிய புலன் விசாரணையைத் தொடங்குவோம்.” – என்று பகிரங்கமாக அறிவித்திருந்தார். அவர் அப்படி அறிவித்து பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. அது பற்றி விசாரிக்க ஒரு புலன்விசாரணையாளர் கூட இதுவரை என்னை நாடவில்லை.

யுத்த காலத்தில் பெரும் அழிவுகளையும் உயிரிழப்புகளையும், மோசமான தாக்குதல்களையும், அடக்குமுறைகளையும், அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டவர்கள் தமிழ் ஊடகவியலாளர்கள்தான். ஒரு வகையில் அத்தகைய அச்சுறுத்தல் இன்னும் தொடரவே செய்கிறது.

ஆனால் சிங்கள ஊடகவியலாளர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் பற்றி மட்டுமே சிங்கள அரசு விரிவாக விசாரிக்கின்றது. தமிழ் ஊடகவியலாளர்களுக்கு இழைக்கப்பட்டவை பற்றி – அது விடயத்தில் நீதியை நிலைநாட்டி, பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதில், வழமை போல சிங்களம் உதாசீனமாகவே நடந்து கொள்கின்றது.

இதை நாங்கள் தூக்கிப் பிடித்துக் காட்டினால் அநுர அரசு அதனை இனவாதம் பேசுகிறோம் என அர்த்தப்படுத்தும். விமர்சிக்கும். அதுதான் நாட்டின் இன்றைய அரசியல் சூழ்நிலை. அதுதான் சிங்களத்தின் மனவமைப்பும் கூட!

## அதிதீவிர...

வைத்தியசாலையில் நேற்றுப் பிற்பகல் அனுமதிக்கப்பட்டார்.

அவரது நோய் நிலைமையைப் பரிசோதித்த சிறைச்சாலை வைத்தியர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றுமாறு பரிந்துரைத்தனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க, நேற்றுமுன்தினம் இரவு சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

உயர் இரத்த அழுத்தம் மற்றும் அதிக சர்க்கரை அளவு காரணமாக முன்னாள் ஜனாதிபதி ரணிலைச் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு வைத்தியர்கள் முன்னர் பரிந்துரைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டுக்காகவே...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்படுவதற்கு முன்பு கருத்து வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம், ரணில் விக்கிரமசிங்கவின் இந்தக் குரல் பதிவை ஊடகங்களுக்கு வெளியிட்டார்.

“நான் எப்போதும் நாட்டுக்காகவே உழைத்திருக்கின்றேன். நான் தனிப்பட்ட காரணங்களுக்காக உழைத்ததில்லை. இந்த ஆட்சியின் உண்மை இப்போது வெளிவருகின்றது. எல்லா இடங்களிலும் நடைபெறும் இதுபோன்ற அரசியல் நடவடிக்கைகளை நான் ஏற்றுக்கொள்வதில்லை.” – என்று ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

## நாட்டை மீட்ட...

அத்துடன் சமூக ஊடகச் செயற்பாட்டாளர் ஒருவர் கணித்ததாகக் கூறப்படுவதற்கு அமைய, ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டுள்ளமை வருத்தமளிக்கின்றது என்றும் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் பற்றி சமூக ஊடகச் செயற்பாட்டாளர் சுதத்த திலகசிறிக்கு எவ்வாறு முன்கூட்டியே தெரியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

# முன்னாள் ஜனாதிபதிகளின் கைதினை முன்னரே ஆராயும் குழு வேண்டும்

## விமல் வீரவங்ச கூறுகின்றார்

நாட்டில் முன்னாள் ஜனாதிபதிகளின் கைது ஒன்று இடம்பெறுவதற்கு முன்னர் அது தொடர்பில் ஆராய்வதற்கு குழுவொன்று அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்

நாளை அநுரவுக்கு இதுபோன்று நடந்தாலும் இந்த விடயத்தையே தாம் கூறப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

ரணிலா அநுரவா அல்லது வேறு எவருமா என்ற பிரச்சினைகள் இங்கு இல்லை.



குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு நீதித்துறை தவறான வழியில் பயன்படுத்தப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றங்களை இரவு நேரம் வரை திறந்து வைத்து இவ்வாறான நோக்கத்தை நிறைவேற்றும் நிலை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தில் மின்சாரத்தை துண்டித்து, சட்டத்தின் மீதுள்ள நம்பிக்கையை பாழாக்கி, நகைப்பூட்டும் செயல்களில் ஈடுபட வேண்டாம் என அரசாங்கத்தை எச்சரிப்பதாகவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்.

# போதைப்பொருள் தொடர்பில் 2025 பேர் இந்த ஆண்டில் கைது

இந்த ஆண்டின் இதுவரை போதைப் பொருளுடன் தொடர்புடைய 2025 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் 937 கிலோ ஹெரோயின், 1408 கிலோ ஐஸ், 28 கிலோ கொக்கைன், 427 கிலோ ஹஷிஷ் மற்றும்



124,000 கிலோ கேரள கஞ்சா ஆகியன பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த ஆண்டில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களில் ஈடுபடும் குழுக்களிடமிருந்து 4.5 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தார் மாலிங்க!

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் லசித் மாலிங்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்து நலம் விசாரித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் நடைபெற்றது.

மஹிந்த ராஜபக்ஷவின் பதவிக் காலத்தின்போது தாம் இலங்கை கிரிக்கெட் அணியில் விளையாடியது குறித்து கலந்துரையாடியதோடு அதற்குத் தமது நன்றிகளையும் லசித் மாலிங்க தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பு குறித்து லசித் மாலிங்க, தனது முகப்புத்தகப் பதிவில்,

“2009 இல் மீண்டும் விளையாட்டுத் துறைக்குத் திரும்புவதற்கு நீங்கள் எனக்கு உற்சாகம் அளித்தீர்கள்,

அதனால் மேலும் பதினொரு ஆண்டுகள் நாட்டுக்கு வெற்றிகளைக் கொண்டு வர முடிந்தது.

எப்படியும், எப்போதும், மஹிந்த ராஜபக்சவே.” என குறிப்பிட்டுள்ளார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# எது இனவாதம்?

இலங்கைத் தீவின் வடக்குக் கிழக்கை தங்கள் பூர்வீகத் தாயகமாகக் கொண்ட தமிழர்கள், அங்கு தங்கள் தேசிய இருப்புக்கான உரிமைகளை, உரித்துக்களை நிலை நிறுத்துவதற்காகக் கடந்த எட்டு தசாப்த காலமாகப் போராடி வருகிறார்கள்.

ஆரம்பத்தில் அஹிம்சை வழியில் - அறநெறியில் - காந்தீய மார்க்கத்தில் - அவர்களின் போராட்டம் மூன்று தசாப் தங்களுக்கு மேல் நீடித்தது. அந்த அஹிம்சைக் குரலை - அற நெறிக் கோரிக்கையை - அமைதி வழி வலியுறுத்தலை - செவி மடுக்கத் தவறிய கொழும்பின் பௌத்த - சிங்களப் பேரினவாத ஆட்சிப் பீடங்கள், உரிமை கேட்டுப் போராடிய மக்களை அடக்குவதற்காக வன்முறையை - அரச பயங்கரவாதத்தை - அந்த மக்கள் குழுமம் மீது கட்ட விழ்த்து விட்டது. அந்த அரச பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்காக வேறு வழியின்றி, சுய பாதுகாப்பு இலக்கோடு, தங்கள் போராட்டத்தை ஆயுத வழிக்குத் திருப்பினார்கள் தமிழர்கள்.

அரச பயங்கரவாதத்தைத் தமிழர்கள் மீது ஏவிவிட்ட தென்னிலங்கை பௌத்த - சிங்களப் பேரினவாத ஆட்சிப் பீடங்கள் பின்னர் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை 'பயங்கரவாதமாக' சித்திரித்து, அதை அடக்கும் பெயரில் அரச பயங்கரவாதத்தை கட்டுமட்டு இல்லாமல் தமிழர்கள் மீது மூர்க்கமாகத் திரும்பி விட்டது.

அரச பயங்கரவாதத்தை பெரும் எடுப்பில் தமிழர்கள் மீது ஏவிய சிங்களப் பேரினவாதம், தமிழர்களின் போராட்ட நடவடிக்கைகளைப் பயங்கரவாதமாகச் சித்திரித்தது.

அதேபோன்று மற்றொரு வேலையை இப்போதும் அது முன்னெடுக்கின்றது. தமிழர்கள் மீது பேரினவாதத்தை பெரும் மேலாண்மை வெறிப்போக்காக, காலம் காலமாகக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் பௌத்த - சிங்கள மேலாண்மை ஆட்சியாளர்கள், தமிழர்கள் தம் உரிமைக்காக - உரித்துக்காக - எழுப்பும் கோரிக்கைகளை இனவாதமாக இப்போது சித்திரிக்கின்றனர்.

பேரினவாதத்தை பெருங் கொடூரமாக - பெரும் குரூரமாக - தமிழர்கள் மீது ஏவி விட்டு, அடக்குமுறையைமுன்னெடுக்கும் பேரினவாதிகள், அந்த அடக்குமுறைக்கு எதிராகப் போராடும் - குரல் எழுப்பும் - தமிழர்களின் கருத்தியலை இனவாதமாக இப்போது சுட்டி இருக்கிறார்கள்.

அதனை கடந்த வெள்ளிக் கிழமை நாடாளுமன்றத்தில் தமது உரையில் தோல் உரித்துக் காட்டி இருக்கிறார் இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்.

தமது தேசிய இனத்தின் இருப்புக்கும், உரிமைக்குமாக தமிழர்கள் எழுப்பும் உரிமைக் குரலை இனவாதம் என்கிறது அரசு. உண்மையில் பேரினவாதத்தைக் கொடூரமாகக் கட்டமைத்து விட்டிருக்கும் தென்னிலங்கை ஆட்சிப் பீடம்தான் பேரின வாதம் பேசுகிறது. அந்த இன வாத அடக்கு முறைக்கு எதிராக குரல் எழுப்புவதை இனவாதம் என்பது வேடிக்கையிலும் வேடிக்கை.



# வேலியில் போன ஓணானை மடியில் சொருகிய தேசிய மக்கள் சக்தி அரசு

- ந.லோகதயாளன் -

யானை தன் கையால் தன் தலையில் மண் அள்ளிப்போடுவது யாவரும் அறிந்த விடயம். ஆனால் இலங்கையில் யானையால் தன் தலையில் மண் அள்ளிப் போட்டு விட்டாரா அரசுத் தலைவர் என இலங்கையை அனைவரும் பார்க்கின்றனர்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒன்றும் தமிழ் மக்களிற்கு ரெம்ப வேண்டப்பட்டவர் அல்லர். அவரை அவர் பதவியில் இருந்த சமயமே – சிங்கள மக்களே – தேசியத் தேர்தலில் நிராகரித்து, 3 ஆவது நிலைக்கு தள்ளிவிட்டனர்.

ரணிலின் ஆட்சிக் காலத்தில் சிதறடிக்கப்படாத அரசியல் கட்சிகளும் கிடையாது. தமிழ் மக்களால் அதிகம் நேசிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பையே பிளவுபடுத்தியவர் அவர்.

நாட்டின் முதலாம் கிழட்டு நரியான ஜே.ஆரின் வளர்ப்பில் வந்த இரண்டாம். கிழட்டு நரியாகவே ரணில் பார்க்கப்படுகின்றார்.

இவை இவ்வாறு இருந்தாலும், ரணில் மீது பட்டலந்த, பிணைமுறி மோசடிக்கு இடமளித்தமை, மதுபானசாலை "பெர்மிட்" விநியோகத்தை அரசியல் வாதிகளுக்கான லஞ்சமாக வழங்கியமை என நீண்ட குற்றச் சாட்டுப் பட்டியல்கள் உண்டு. அவை தொடர்பில் நடவடிக்கை எடுத்திருந்தால் சிங்கள மக்கள் மட்டுமன்றி, தமிழ் மக்களும் வரவேற்றிருப்பர்.

இங்கே வெறும் 16 மில்லியன் ரூபா – அதாவது ஒரு கோடியே 60 லட்சம் ரூபா – அரச நிதி துஷ்பிரயோகம் என்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார் என்பதே கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கின்றது.

அரசைப் பொறுத்தமட்டில் அது சரியா, பிழையா என்பதற்கு அப்பால் சுமார் இரு நூறு கோடி ரூபா வீட்டையே தனது பாடசாலைக்குத் தந்தவர் விடயத்தில் இது பாரிய குற்றமாகுமா என்ற கேள்வி எழத்தான் செய்கின்றது.

இதற்கும் அப்பால் கைது செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்காவின் வழக்கு 26 ஆம் திகதி நீதிமன்றம் வரும்போது எத்தனை சட்டத்தரணிகள் அவருக்காக முன்னிலையாக வருவார்கள் எனக் கணக்கிட ஒரு கூட்டம் காத்திருக்கின்றது.

விளக்கமறியல் உத்தரவில் முதலில் சிறைச்சாலைக்கும், பின்னர் சிறைச்சாலை வைத்தியசாலைக்கும் கொண்டு செல்லப்பட்ட அவர், மறுநாள் அதாவது நேற்று 23 ஆம் திகதி, தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அரசின் உயர் மட்டங்களை இரண்டு மேற்குலக நாடுகளின் தரப்புகள் அணுகித் தமது அழுத்தங்களைப் பிரயோகித்து, சிறைச்சாலை வைத்தியசாலையிலிருந்த ரணிலை தேசிய வைத்தியசாலைக்கு மாற்ற வைத்துள்ளன என்று கூறப்படுகின்றது.

நாளை மறுதி அடுத்த நீதிமன்றத் தவணைக்கு முன்பு, இன்னும் எத்தனை இராஜதந்திரிகளின் அழுத்தம் ஏற்படும் என்பதான பரபரப்பும் உள்ளது.

இங்கே இராஜதந்திரிகளின் அழுத்தம் என்பது அந்த இராஜதந்திரிகளின் மனதை பொறுத்த விடயமல்ல. நிச்சயமாக இந்த விடயத்தில் அந்தந்த நாடுகளின் முடிவாகவே அந்த அழுத்தங்கள் அமையும் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது.

அந்தந்த நாடுகளின் முடிவிற்கு மாறான ஓர் நிலைப்பாட்டில் இலங்கை காலடி வைத்து நகர்வதால், இந்த நாடுகளின் பதில் நகர்வு எப்படி இருக்கும் என்பது தொடர்பிலேயே அவதானிகளின் கவனம் செல்கின்றது. அது எந்த விளைவுகளை உண்டு பண்ணும் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. அந்தக் கேள்வி நிச்சயமாக ஓர் அறகலயக்கு இட்டுச் செல்லும் என அச்சுறுத்தும் நோக்கம் கிடையாது. ஆனால் சில திருப்பங்களை உண்டாக்கலாம்.

ரணில் விக்கிரமசிங்கா தேர்தல் தோல்விகளின் பின்பு முழுமையாக இல்லாது விட்டாலும் பல விடயங்களில் ஒதுங்கியிருந்தார். அவரை வலிய இழுத்து வந்து அரசியல் செய்வதுபோன்ற தோற்றத்தை இந்தக் கைது விவகாரம் ஏற்படுத்தப் போகின்றது.

இதனையே, ஆட்சித் தரப்பு யானைக் கொண்டு தன் தலையில் மண் அள்ளிப் போட்டு விட்டதோ என இலங்கையர் அனைவரும் பார்க்கின்றனர் எனக் குறிப்பிட்டேன்.

ரணிலின் தந்திரத் திறமை செத்து விட்டதா அல்லது அதிரடி ஆட்டங்களை இனி முன்னெடுப்பாரா என்பவை ரணில் சிறையில் இருந்து வெளிவந்து 3 மாதங்களில் வெளியே தெரிய வரும் என்பது மட்டும் திடமாகவுள்ளது.

முன்னர் ஆட்சி புரிந்தவர்களில் ஊழல், மோசடி, முறைகேடுகள், பதவித் துஷ்பிரயோகம் அனைத்திலும் "நம்பர் வன்" ஆக இருப்பதாகக் கூறப்படும் "மஹிந்த அன் கோ" மீது எந்தவொரு நடவடிக்கையும் இன்றி, அவசர அவசரமாக ரணில் மீது நடவடிக்கை என்பதும் ஏதோ ஒரு சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவே தோன்றுகின்றது. அல்லது மஹிந்த அன் கோ மீது அநுர அரசும் அச்சம் கொண்டுள்ளதா என்ற வினாவிற்கான விடையையும் காண முடியவில்லை.

ஆக மொத்தம் வேலியில் போன ஓர் ஓணானை தேசிய மக்கள் சக்தி தேடிப் பிடித்துத் தனது வேட்டியில் சொருகியிருக்கின்றது தேசிய மக்கள் சக்தி. ஓணான் என்ன செய்கின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.



# தொழில் சட்டத்தில் சிறந்த நிபுணரான விமலராஜாவை தமிழ்ச்சமூகம் இழந்தது

**- வீரகத்தி தனபாலசிங்கம் -**

இலங்கையில் குறிப்பாக, தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் இருந்த சிறந்த தொழில் சட்ட நிபுணர்களில் ஒருவரான வேலாயுதம் விமலராஜா மறைந்து மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. முன்னாள் தொழில் நீதிமன்ற நீதிபதியான அவர் கடந்த ஜூன் மாதம் 12 திகதி தனது 90 வது வயதை அடையவிருந்த நிலையில் சரியாக ஒரு மாதத்துக்கு முன்னர் (12 மே 2025) ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் காலமானார்.

எனது சொந்த ஊரான வடமராட்சி கரவெட்டியை சேர்ந்தவரான விமலராஜாவுடன் இளவயதில் பழகக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை. அவர் என்னை விடவும் வயதில் மிகவும் மூத்தவர். நாங்கள் வளர் இளம் பருவத்தினராக இருந்த நாட்களில் விமலராஜா கரவை வெல்லன் விநாயகர் கோவில் திருவிழாக்களுக்கு வந்ததை நான் கண்டிருக்கிறேன்.

கொழும்பில்தான் அவருடன் ஊடாடக்கூடிய சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. நான் ஒரு பத்திரிகையாளனாக இருப்பது அவருடன் நெருக்கமாக பழகுவதற்கான வாய்ப்பை அதிகரித்தது.. விமலராஜாவின் தந்தையார் கே.வேலாயுதம் அவர்கள் எமது ஊரில் பிரபல்யமான ஓர் ஆங்கில ஆசிரியர்.

ஆஸ்திரேலியாவுக்கு விமலராஜா குடும்பத்துடன் புலம்பெயரும் வரை நாமிருவரும் நெருக்கமான தொடர்பைப் பேணினோம். அவரின் குடும்பத்தவர்களும் கூட எனக்கு பழக்கமானவர்களே. கடுமையாக சுகவீனமடைவதற்கு முன்னதாக என்னுடன் அவர் அடிக்கடி தொலைபேசியில் தொடர்புகொண்டு நீண்ட நேரம் பலதும் பத்தும் பேசுவார். பழைய அனுபவங்களையும் மீட்பார். அவரது மனைவி இரு வருடங்களுக்கு முன்னர் ஆஸ்திரேலியாவின் காலமான போது விமலராஜாவுடன் தொடர்புகொண்டு அனுதாபத்தை தெரிவித்து ஆறுதல் கூற முடியாத அளவுக்கு அவர் சுகவீனமுற்றிருந்தார் என்பது துரதிர்ஷ்டவசமானது.

கரவெட்டி கிராமத்தின் முன்னேற்றத்தில் பெரும் அக்கறை கொண்டவரான விமலராஜா, விக்னேஸ்வரா கல்லூரியின் வளர்ச்சிக்காக பெரிதும் பாடுபட்டவர். அந்த கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கத்தின் கொழும்புக்கிளையின் தலைவராக பல வருடங்கள் பணியாற்றிய அவர் நான் அந்த கல்லூரியில் கல்வி கற்காதவன் என்ற போதிலும், பழைய மாணவர் சங்கக் கூட்டங்களில் பங்கேற்குமாறு அழைப்பார். “நீ அங்கு கல்வி கற்காவிட்டாலும், எந்தவொரு கரவெட்டியானும் விக்னேஸ்வராவுடன் தன்னை அடையாளப்படுத்தாமல் இருக்க முடியாது” என்று நகைச்சுவையாக அவர் கூறுவார். அவர் யாழ்ப்பாணம் இந்து கல்லூரியிலும் கல்வி கற்றவர்.

நாமெல்லோரும் என்றென்றைக்கும் பெருமைப்படக் கூடியதாக தொழில் சட்டத்துறையில் சிறந்து விளங்கிய விமலராஜா கைத்தொழில் மற்றும் தொழில் சட்டவாதிகள் மத்தியில் மிகுந்த அறிவார்ந்தவர்களில் ஒருவராக விளங்கினார். தொழில் சட்டங்களில் ஆழமான ஆய்வுகளைச் செய்வதில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

ஆரம்பத்தில் கொழும்பில் தொழில் திணைக்களத்தில் இருபது வருடங்களாக பணியாற்றியபோது நாட்டின் பல பாகங்களிலும் நீதிமன்றங்களில் கைத்தொழில் உறவுகளுடன் கூடிய முக்கியமான வழக்குகள் பலவற்றைக் கையாண்டார். தொழில் திணைக்களத்தின் கைத்தொழில் உறவுகள் அதிகாரி என்ற வகையில் தொழில் முகாமைத்துவ மகாநாடுகள் பலவற்றுக்கு விமலராஜா தலைமை தாங்கியமையுடன் நீண்டகாலமாக இழுபறிப்பட்ட தொழில் பிணக்குகள் பலவற்றுக்கு தீர்வையும் கண்டார். அதற்காக தொழில் திணைக்களத்தில் அவருக்கு தனித்துவமான ஒரு மதிப்பு இருந்தது.

சட்டக்கல்லூரியில் படித்து சட்டத்தரணியாக வெளியேறியதும் 1978 ஆம் ஆண்டில் தொழில் நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெற்ற விமலராஜா கொழும்பிலும் நீர்கொழும்பிலும் பணியாற்றினார். வாதிகள், பிரதிவாதிகள் தரப்பில் பிரபலமான சட்டத்தரணிகள் முன்னிலையான சிக்கலான வழக்குகள் பலவற்றை திறமையாக கையாண்ட விமலராஜாவின் பல தீர்ப்புக்களை மேல்நிலை நீதிமன்றங்களும் உறுதிப்படுத்தின.

1991 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற அவர் அதற்கு பிறகு தொழில் பிணக்குகள் சம்பந்தப்பட்ட பல வழக்குகளில் முதல்நிலை நீதிமன்றங்களிலும் மேல்நிலை நீதிமன்றங்களிலும் சட்டத்தரணியாக முன்னிலையானார். கைத்தொழில் நீதிமன்ற நடுவர்கள் சங்கத்தின் தலைவராக ஆறு வருடங்கள் பதவி வகித்த விமலராஜா 1996 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கைத்தொழில் சட்ட நிறுவனத்தின் செயலாளர் நாயகமாகவும் பணியாற்றினார். தொழில் சட்டங்கள் பற்றி அவர் எழுதிய பல்வேறு நூல்கள் அந்த துறை சார்ந்தவர்களுக்கு பெரிதும் பயனுடையவையாக இருக்கின்றன.

ஆஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்த பிறகு அவர் இலங்கைக்கு வரமுடியாமல் போய்விட்டது. அவரின் மறைவு என்னைப் பொறுத்தவரை, என்னைப் புரிந்து கொண்டு நெருக்கமாகப் பழகியதுடன் பல்வேறு வழிகளிலும் உதவியாக இருந்த ஒரு நல்லுள்ளத்தின் இழப்பாகும். அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்.

# காணி, பொலிஸ் அதிகாரங்களை எப்போதுதான் பகிர்ந்தளிப்பீர்கள்?

## சபையில் கேள்வி எழுப்பிய ரவிகரன் எம்.பி.

(விஜயரத்தினம் சரவணன்)

வடக்கு,கிழக்கு தமிழர் தாயகமெனவும் தொன்று தொட்டு தமிழர்கள் வாழ்ந்து வந்த நிலப்பரப்பெனவும் குறிப்பிட்ட வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இணைந்த வடகிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வையே நெடுங்காலமாகத் தமிழர்கள் வலியுறுத்தி வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அதிகாரப்பகிர்வு நோக்குடன் கெண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்தை இவ்வரசு முழுமையாக எப்போது நடைமுறைப்படுத்தப. போகின்றது எனவும், பொலிஸ் மற்றும் நில உரிமைகளை மாகாணசபைகளுக்கு எப்போது இவ்வரசு வழங்கப்போகிறதெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்பு வேளொ பிரேரணையில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

காலனித்துவ ஆட்சியானது ஒற்றையாட்சி அரசியலை இத்தீவிலே கையளித்த நாள் தொடக்கம் இன்று வரை தமிழ் இனத்தின் பண்புகள் பல்வேறு வழிகளில் சிதைக்கப்பட்டு தொடர்ந்தும் தேசிய இருப்புக்காக, நிலையான அரசியல் தீர்வுக்காக காலவெளியில் பல வடிவங்களில் தமிழர்களாகிய நாம் போராடி வருகிறோம்.

2009 இற்கு முன்னர் இராணுவ வல்லாளுகையாலும் போருக்குப் பின்னர் கட்டமைக்கப்பட்ட நுட்பங்கள் கொண்ட மெல்லாளுகையாலும் தமிழர் மீதான அடக்குமுறைகளை, அதிகாரப் பறிப்புகளை தமிழர் தாயகப்பரப்புகளில் இத்தீவின் அரசுகள் தொடர்ந்தும் மேற்கொண்டு, பௌத்த – சிங்கள சாயத்தை தீவு முழுவதும் பரப்ப எத்தனித்துக்கொண்டே இருக்கிறது.

எண்பது ஆண்டுகளுக்கு மேலாக எமது அரசியல், பொருளாதார, கலாசார உரிமைகள் புறக்கணிக்கப்பட்டு, நீளும் இந்த காலவெளியில் தீவிலுள்ள பன்முகத்தன்மையை நிலைநிறுத்த இன்று வரையான இத்தீவின் அரசுகள் முயலவில்லை. ஒற்றுமைக்கான எத்தனிப்புகள் இழுத்தடிப்புகளாகின்றன.

இனக்கலவரங்களுக்கும், இனப்படுகொலைகளுக்கும், கட்டமைக்கப்பட்ட வழியில் தமிழினத்தின் பண்புக்கூறுகள் அழிக்கப்படுவதற்கும் எதிராக தொடர்ந்தும் நாம் போராடிக்கொண்டே வருகிறோம்.

கடந்து வந்த அரசுகள் நிலம் வழியாக இனப்பரம்பல் கோலத்தை மாற்றியமைத்தன.

பௌத்தர்கள் இல்லாத வாழிடங்களில், தனியார் காணிகளை கையகப்படுத்தி, சைவ ஆலய முற்றங்களை கையகப்படுத்தி, நீதிமன்ற உத்தரவுகளை மீறி, பௌத்த மத அடையாளங்களை நிறுவின.

அபிவிருத்தியின் போர்வையில் பல்வேறு திட்டங்களின் ஊடாக தமிழர் காணிகள் கையகப்படுத்தப்பட்டு சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டனர்.

இவ்வாறாக தமிழர் தாயகப்பரப்பில் தமிழரின் பெரும்பான்மை கட்டமைக்கப்பட்டு சிதைக்கப்படுகின்றது.

போருக்குப் பின்னரும் அதிகளவான இராணுவம் வடகிழக்கில் நிலைகொள்கிறது. இன்று வரை ஆயிரக்கணக்கான ஏக்கர் தமிழர் காணி, இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ளது. முல்லைத்தீவில் மட்டும் எமது மக்களுக்குச் சொந்தமான 5இலட்சம் ஏக்கர் காணிகள் வரையில் அபகரிக்கப்பட்டு இன்னமும் விடுவிக்கப்படாது உள்ளன. அதற்கான ஆதாரமும் என்னிடத்திலுண்டு. சமச்சீரற்ற முறையிலான வடகிழக்கின் இராணுவக்குவிப்பு தீவின் நல்லிணக்கத்தைத் தடுக்கிறது. தமிழ் மக்கள் தங்கள் சொந்த நிலத்தில் வாழ முடியாமல் தவிக்கின்றனர். மக்களின் நிலங்களை உடனடியாக திருப்பி வழங்க வேண்டியதும் வடகிழக்கில் அதிகரித்த இராணுவப் பிரசன்னத்தை உடனடியாக அகற்றுவதும் இவ்வரசின் கடன்.



வடகிழக்கு தமிழர் தாயகம். தொன்றுதொட்டு தமிழர் வாழ்ந்துவந்த நிலப்பரப்பு. இணைந்த வடகிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப்பகிர்வை வலியுறுத்தியே எங்கள் அரசியலை நெடுங்காலமாக இம்மண்ணில் தொடர்கிறோம். 13ஆவது திருத்தச்சட்டத்தை இவ்வரசு முழுமையாக எப்போது நடைமுறைப்படுத்தப்போகிறது? பொலிஸ் மற்றும் நில உரிமைகளை மாகாணசபைகளுக்கு எப்போது இவ்வரசு வழங்கப்போகிறது?

அபிவிருத்தியில் வடக்கும் கிழக்கும் இன்றளவும் பின்னடைவிலேயே உள்ளன. மிகவும் கடைசி நிலை மாவட்டங்களாகவே முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி உள்ளிட்ட மாவட்டங்கள் காணப்படுகின்றன. சமத்துவ அடிப்படையிலான அபிவிருத்தியை நிலைநிறுத்த வேண்டுமாயின் அபிவிருத்தி நிலைகள் சமநிலை அடையப்படும் வரை நிதி ஒதுக்கீடுகளை இங்கு பெருக்கிக்கொள்ளவேண்டும்.

அதிகஷ்ட பாடசாலைகள், கஷ்ட மருத்துவமனைகள், தீயணைப்புப்பிரிவுகள் இன்மை, பல்கலைக்கழக வளாகங்கள் இன்மை, வறுமையில் முதலிடம், ஒப்பீட்டளவில் சுற்றுலாவில் ஒரு வீதத்தையேனும் அடைந்திராத கடைநிலை என்று பல வழிகளிலும் அபிவிருத்திக்கான வாய்ப்புகளில் மிகவும் புறக்கணிக்கப்பட்ட மாவட்டங்களாக மன்னார், முல்லைத்தீவு அடங்கலான வடகிழக்கு மாவட்டங்கள் உள்ளன.

போருக்குப்பின்னர் ஒன்றரை தசாப்தம் கடந்தும் வடகிழக்கு, தீவில் சமப்பாடாதநிலையில் உள்ளது. இவற்றை சீர்செய்யும் பொருட்டு பொருளாதார மேம்பாட்டு அதிகார சபையை நிறுவும் வகையில் கொள்கை அளவில் ஒரு மேம்பாட்டை உடன் கொண்டு வாருங்கள் என வலியுறுத்துகிறேன் – என்றார்.







# சந்நிதியான் கொடி ஏறியது

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் ஆயிரக்கணக்கான பக்தர்களின் கூட்டத்துக்கு மத்தியில் நேற்று நண்பகலுக்குச் சற்றுப் பின்னர் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமானது.

அன்னதான கந்தன் என்று அழைக்கப்படும் சந்நிதியானின் திருவிழாவில் அதிக எண்ணிக்கையான பக்தர்கள் முதல் நாளிலேயே கலந்து கொண்டு காவடி, பால் செம்பு எடுத்தும் நேர்த்திக்கடன்களை நிறைவு செய்தனர்.

பதினாறு நாள்கள் இடம் பெறும் சந்நிதி முருகன் உற்சவத்திக் செப்ரெம்பர் முதலாம் திகதி பூங்காவனத் திருவிழாவும், அடுத்த நாள் 2ஆம் திகதி கைலாய வாகன உற்சவமும் இடம்பெறவுள்ளன. சப்பைரதத் திருவிழா செப்ரெம்பர் 09ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

தேர் உற்சவம் செப்ரெம்பர் 06ஆம் திகதியும், தீர்த்தத்திருவிழா செப்ரெம்பர் 07ஆம் திகதியும் இடம்பெறும்.

அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு மௌனத் திருவிழா இடம்பெறவுள்ளமை ஆலயத்தின் சிறப்பம்சமாகும்.

அமாவாசை அற்றுப்போகும் நேரத்தில் சந்நிதியானின் கொடியேற்றப்படும். அவ்வேளை கந்தனின் அற்புதத்தால் வள்ளிக்கொடி தோன்றும். இதனையே கொடி ஏற்றத் திருவிழா என்று பக்தர்கள் கொண்டாடுவர்.

ஆகமம் சாராத பக்திசார் வழிபாட்டு மையமாக இருக்கும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியின் கொடியேற்ற நிகழ்வு ஏனைய ஆலயக் கொடியேற்ற நிகழ்வுகளில் இருந்து வேறுபட்டதாகும்.

ஆவணி மாத பூர்வபக்க பிரதமை கூடும் நேரத்தில் இங்கு கொடியேற்றம் இடம்பெறுவது வழமை.

தொடர்ச்சி▼

















# சந்நிதியான் கொடி ஏறியது

தொடர்ச்சி▲

அந்த வகையில் வாக்கிய பஞ்சாங்கத்தின் பிரகாரம் நேற்று 23.08.2025 பகல்மாலை 12.24 இற்கு அமாவாசை அற்றுப் போனதால் பிற்பகல் 1.22 மணியளவில் சந்நிதியானின் கொடியேற்றம் நிகழ்ந்தது.

வைரவப் பெருமானுக்குக் காப்புக் கட்டிப் பின்னர் பிள்ளையார் பூசை மூலவரான வேலவருக்குப் பூசை என்பன இடம்பெற்றமையைத் தொடர்ந்து கொடியேற்றத்தின் முக்கிய நிகழ்வான கேடகப் பூசை இடம்பெற்றது.

ஆலய வாயிலில் மூலஸ்தானத்தை நோக்கிய வாறு உள்ள நந்திக்கு (இடபத்திற்கு) முன்பாக கேடகம் வைக்கப்பட்டிருக்கும். (கேடகம் என்பது சுவாமியைக் காவிச்செல்லும் கூடு) கேடகத்தின் உச்சியில் உள்ள கலசத்தில் தருப்பை, ஏழு மாவிலைகள் என்பவற்றைப் பட்டுத் துண்டால் கட்டி பூசை இடம்பெற்றது. இதனைக் கலச பூசை என்கின்றனர். இதுவே கொடியேற்றத்தின் முக்கிய நிகழ்வாகும்.

கொடியேற்றம் நிகழ்ந்ததன் அறிகுறியாக ஆலய வாயிலில் சேவல் கொடி பறக்கவிடப்பட்டது. அதன்பின் எழுந்தருளி வேலவருக்குப் பூசை இடம்பெற்றதும் அவரை கேடகத்தில் எழுந்தருளச் செய்து உள்வீதியுலா வரச் செய்தனர்.

வள்ளி அம்மன் வாசலுக்கு எழுந்தருளி வேலவர் வந்ததும் அவரை வள்ளி அம்மன் கோவிலுக்குக் கொண்டு சென்று தீர்த்தக் குளத்தில் நீர் எடுத்து வேலவருக்கும் வள்ளி அம்மைக்கும் விசேட பூசை இடம்பெற்றது.

சந்நிதி முருகன் ஆலய 2025 ஆம் ஆண்டுக்கான பெருந்திருவிழாவிற்காக வருகைதரும் அடியார்கள் நலன்கருதி உள்ளூராட்சி மன்றத்தினர் சுத்தப்படுத்தல் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். அதேவேளை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் நுளம்புக் கட்டுப்பாடு மற்றும் குடிதண்ணீர், சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சந்நிதி முருகன் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு விசேட போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாதுகாப்பு கடமையில் குடிசார் உடையிலும், சீருடையிலும் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்

இதேவேளை நாளாந்தம் பசித்தோர்க்கும், வறுமையிலுள்ளோர்க்கும் அறப்பணி ஆற்றிவரும் சந்நிதியான் ஆச்சிரமத்திலும் ஆயிரக்கணக்கான பக்தர்களின் கூட்டத்துக்கு மத்தியில் விசேட பஜனை வழிபாடுகளுடன் சிறப்பு பூசைகளும் இடம் பெறுகின்றன. நாளாந்த திருவிழாக்காலத்தில் பல்வேறு ஆன்மீக நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன








# ரூ.14 கோடி பெறுமதி ஹெரோயின், ஐஸுடன் இருவர் ராகமவில் வைத்து அம்பாறை பொலிஸாரினால் கைது



(தில்சாத் பர்வீஸ்)

ரூ.14 கோடி பெறுமதியான ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருள்களைத் தன் வசம் வைத்திருந்த சந்தேக நபரையும் அவரது உதவியாளரையும் அம்பாறை மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர். அத்தோடு ஹெரோயின், ஐஸ் போதைப் பொருள், பணம் மற்றும் வாகனம் போன்றவற்றை கைப்பற்றி உள்ளனர்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு 9.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் கொழும்பு மாவட்டம், ராகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, ராகம பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும், அவருக்கு உடந்தையாக இருந்தவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் உஹணைப் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய சந்தேக நபர் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் எனொ பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடம் இருந்து 8 கிலோ 168 கிராம் ஹெரோயின், 666 கிராம் ஐஸ் போதைப் பொருள், 8 இலட்சத்தி 23 ஆயிரம் ரூபா பணம், மின்னணு தராசு - 03, கையடக்கத் தொலைபேசி 04, வாகன போலி எண் தகடுகள் 06, ஒரு கார், ஒரு வான், ஓர் ஓட்டோ மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டன. சந்தேக நபர்கள் சான்றுப் பொருட்களுடன் சட்ட நடவடிக்கைக்காக பி.என்.பீ. எனப்படும் பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராக வர்ண ஜெயசுந்தரவின் ஆலோசனைக்கு அமைய, அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக சுஜித் வெதமுல்லவின் கட்டளையின் பிரகாரம், அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.பி.எச்.கலனசிறியின் மேற்பார்வையில், அம்பாறை மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சம்பத் விக்கிரமரத்னவின் வழிகாட்டுதலில், அம்பாறை மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி கே.ஏ.எம்.பிரியங்கரவின் தலைமையிலான குழுவினர் இக் கைது நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பி.என்.பீ. எனப்படும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.










# மன்னார் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டம்!

(கி.வசந்தன்)

மன்னாரில் மேற்கொள்ளப்படவுள்ள கனியவள அகழ்வுக்கு எதிராக வவுனியா இளைஞர்களின் ஏற்பாட்டில் சுற்றுச் சூழலுக்கான இளைஞர் நடவடிக்கை அமைப்பின் பங்கேற்புடன் கருநிலம் என்னும் தொனிப் பொருளில் கவன வீர்ப்பு போராட்டம் வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்றது.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் பறை முழங்கி மக்களுக்கு போராட்டத்தின் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் “இந்த மண் எங்களின் உரிமை”, “எங்கள் எதிர்காலத்திற்கான வளத்தை அழிக்காதே” போன்ற வாசகங்கள் எழுதப்பட்டபதாதைகளைதாங்கியவாறுகோஷங்களை எழுப்பி இளைஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் பின்னர் பழைய பஸ் நிலையத்திலிருந்து மணிக்கூட்டு கோபுர சந்தி வழியாக கடை வீதியூடாக சென்று ஹொரவப்பொத்தானை வீதியில் சென்று தமது போராட்டத்தை அவர்கள் முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

இதிக் வவுனியா மாவட்ட இளைஞர்கள்,மன்னார்மாவட்டத்தில்தொடர்போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர்கள், மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் செ.மயூரன், கலைஞர் மாணிக்கம் ஜெகன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






















# பேராசிரியர் கலாநிதி எஸ்.எல்.றியாஸின் 65 நூல்களின் அறிமுகமும், கண்காட்சியும்

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை சமாதான கற்கைகள் நிலைய பணிப்பாளர் பேராசிரியர் கலாநிதி எஸ்.எல். றியாஸ் கடந்த 25 ஆண்டுகளில் எழுதிய 65 நூல்களின் அறிமுகமும், கண்காட்சியும் பன்னூலாசிரியர் கலாபூசணம் ஏ.பீர் முஹம்மது தலைமையில் சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

கடந்த 1996 ஆம் ஆண்டு நவமணி பத்திரிகையில் கிழக்கு மாகாண செய்தியாளராக இணைந்ததன் மூலம் தனது எழுத்துக்களால் பிரகாசித்த எஸ்.எல். றியாஸ் 1996 இல் இலங்கை கிரிக்கெட் அணியின் உலக கோப்பை வெற்றியை தொடர்ந்து ஊடகவியலாளர் எம்.எம்.ஜெஸ்மினும் இணைந்து சர்வதேச கிரிக்கெட் நிகழ்வுகள் என்ற தலைப்பில் டெஸ்ட் விளையாடும் அனைத்து கிரிக்கெட் அணிகளினதும் சாதனைகளை தொகுத்து ஒரு நூலை 2001ஆம் வருடம் வெளியிட்டார். அதுவே அவரின் முதலாவது நூலாகும்.

அன்று ஆரம்பித்த அவரின் எழுத்துப் பணி இன்றும் தொடர்கிறது. குழந்தை உளவியல் பற்றி 1,400 பக்கங்கள் கொண்ட தனது ஆய்வு நூலை (Understanding and supporting Children Psychological Needs) எனும் தலைப்பில் 2 பாகங்களாக வெளியிட்டிருந்தார். மேலும் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு திட்டங்கள் பற்றிய ஆய்வு சுமார் 1,100 பக்கங்கள் கொண்ட ஒரே நூலாக தொகுக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இடம் பெறும் முஸ்லிம்கள் மீதான வன்முறைகள் Violence Against Muslims in Independent India என்ற ஆய்வு 1,700 பக்கங்கள் கொண்டது. அவை 3 பாகங்களாக தொகுக்கப்பட்டுள்ளன.

The Evolution of Muslim Political Aspirations in Sri Lanka என்ற இலங்கை முஸ்லிம்களுக்குஓர் அரசியல்கட்டமைப்பு ஏன் தேவைப்பட்டது என்ற ஆய்வு சுமார் 750 பக்கங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளது. மேலும் 21st Century Romeo and Juliet என்ற கதையானது William Shakespeare இன் Romeo Juliet கதையை அடியொற்றி எழுதப்பட்டது. Romeoவும் Juliet உம் 21ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தால் சமூக ஊடகங்கள் இவர்கள் வாழ்க்கையில் எவ்வாறு செல்வாக்கு செலுத்தியிருக்கும் என்ற ஒரு கற்பனை நூல் மற்றும் தேசிய இனப்பிரச்சினைக்கான காரணங்கள் பற்றிய பல நூல்கள் அடங்கலாக 65 நூல்கள் இந்த கண்காட்சியில் இடம் பிடித்திருந்தன.

இந்நிகழ்வில் மூத்த உலமா "வரலாற்றில் ஓர் ஏடு" புகழ் புகாரி, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. அஸ்ரப் தாஹிர், ஏ.ஆதம்பாவா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ.எம். மன்சூர், ஏ.எம்.நௌசாத் மற்றும் நிர்வாக சேவை அதிகாரிகள், சமூக அமைப்புக்களின் பிரதானிகள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள், கல்விமான்கள், கலாநிதி எஸ்.எல். றியாஸ் அவர்களின் குடும்பத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.












# வெட்டுக் காயங்களுடன் மூதாட்டியின் சடலம் முல்லைத்தீவு பாலைப்பாணி பகுதியில் மீட்பு

(பா.சதீசன்)

பலத்த வெட்டு காயங்களுடன் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் முல்லைத்தீவில் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலைப்பாணி கிராமத்தில் தனிமையில்வசித்துவந்தவயோதிபபெண் ஒருவரே வெட்டு காயங்களுடன் அவரது வீட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தப் பெண்மணி வீட்டில் சடலமாக கிடப்பதனை அவதானித்த கிராமத்தவர்களால் நேற்று முன்தினம் மாலை மாங்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு சென்ற மாங்குளம் பொலிஸார் கிளிநொச்சி தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவு நீதிமன்ற மேலதிக நீதிவான் எஸ்.எச்.மஹ்ரூஸ் சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறும் உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவுகளிடம் ஒப்படைக்குமாறும் தெரிவித்துள்ளார்.

மூதாட்டியிடமிருந்து நகை உள்ளிட்ட பொருள்களைக் கொள்ளையிடும் நோக்குடன் அவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நிலையில் மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தில் முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் பாலைப்பாணி கிராமத்தை சேர்ந்த ராமசாமி ராமாயிப்எனும் 70 வயதுடைய பெண்மணியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.







கனகராசா சரவணன்

# கிழக்கில் தமிழர் மீதான இனவழிப்பின் ஆரம்பப் புள்ளி வயலூர்க் கிராமத்தின் 40 ஆவது வருட மறைவு தினம்!

## அத்திப்பட்டிபோல அம்பாறையில் அழிக்கப்பட்டு காணாமல் போன குடியிருப்பு

அம்பாறை மாவட்டத்தில் பல தமிழ் கிராமங்கள் சிங்கள ஆட்சியாளர்களால் அழிக்கப்பட்டு தமிழ் மக்கள் வாழ்ந்த இடமே இல்லாமல் போன வரிசை நீண்டது.

தமிழீழப் போராட்ட வரலாற்றில் முதன் முதல் 1985 ஓகஸ்ட் 24 ஆம் திகதி விடுதலை இயக்கங்களுக்கும் சிங்கள பேரினவாத அரசுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை திம்புவில் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில், அப்பாவி விவசாயிகள் 40 பேர் படுகொலை செய்யப்பட்டு முழுக் கிராமமுமே அழிக்கப்பட்டு வெளி உலகிற்கு வெளிவராது போன வரிசையில், தமிழர் இன அழிப்பின் ஆரம்பப் புள்ளி வயலூர் கிராமப் படுகொலை அழிப்பு. இந்த இனஅழிப்பின் 40 வருட நினைவு தினம் இன்று 24-8-2005 ஞாயிற்றுக்கிழமை ஆகும்.

திருக்கோவில் பிரதேச செயலக பிரிவிலுள்ள சாகமத்திலிருந்து தெற்கு பக்கமாக 8 மையில் தொலைவில் வயலூர் கிராமம் 1972 ஆம் ஆண்டு காணியற்ற வறிய மக்களின் 200 குடும்பங்களை குடியமர்த்தப்பட்ட ஒரு கொலனியாக இருந்தது.

அரசாங்கம் அக்காலப் பகுதியில் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் மரவள்ளிக் கிழங்கும், குரக்கனும் சாப்பிடுமாறும், உணவு விடுதிகளில் சோறு சமைக்கஜ் கூடாது என கேட்டுக் கொண்ட காலப்பகுதியில், இக்கிராமம் உணவு மற்றும் ஏனைய பயிர்ச் செய்கை அபிவிருத்திக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்ற அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் குடியமர்தப்பட்டது.

இக் கிராமத்தை அடைவதற்கு சாகமத்திலிருந்து காட்டு வழிப் பாதை மட்டும் உள்ளதுடன் நான்கு சக்கர உழவு இந்திரங்கள் மற்றும் மாட்டுவண்டிகள் என்பவை விவசாயத்துக்கான உள்ளீடு மற்றும் உற்பத்திகளை ஏற்றிச் செல்வதற்கு உபயோகிக்கப்பட்டன. அதேவேளை ஏழைகள் வழமையாக இத்தூரத்தை நடந்து சென்று வந்தனர்.

இவர்கள் தடிகள் .களிமண், ஒலை புல்லுகளினால் தமது இருப்பிடங்களை அமைத்து குடியமர்தப்பட்டனர். இவர்களுக்கு சுத்தமான குடி தண்ணீர், கடைகள் என்பன இருக்கவில்லை. இம் மக்கள் மலேரியா மற்றும் நீரிலான தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டமையுடன் தமது வைத்திய சேவையைப் பூர்த்தி செய்ய 10 மைல்களுக்கு அப்பால் உள்ள அக்கரைப்பற்றுக்கு செல்ல வேண்டியிருந்தது.

இருந்தபோதும் தமது விவசாயமான சோளம், குரக்கன், மரவள்ளி போன்ற பயிர்களை தொடர்ந்து செய்கை பண்ணி வந்தனர். அவர்களது ஆடுகள், கோழிகளை நரிகள், சிறுத்தைகள் அடித்துச் சென்ற அதேவேளை காட்டுப்பன்றிகள் பயிர்களையும் நாசம் செய்தன. ஆயினும் அவர்கள் இத்தனை கஷ்டங்களுக்கு மத்தியிலும் கடும் உழைப்பு, விடாத பிரயத்தனத்துடன் மகிழ்சியாக தொடர்ந்து வாழ்ந்து வந்தனர்.

இத்தகைய ஒரு சமூகம்தான் இராணுவத்தினால் படுகொலை செய்யப்பட்டது – அதுவும் யுத்த நிறுத்த சமயத்தில்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் சகோதரர் எச். டபிள்யூ. ஜயவர்தனா தலைமையிலான அரசாங்க குழுவுக்கும் மறுபுறத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் விடுதலை இயக்கங்களான தமிழ்மீழ விடுதலைப் புலிகள், புளொட், ஈ.பி. ஆர்.எல்.எவ்., ஈரோஸ். ரெலோ ஆகிய 5 இயக்கங்களும் என திம்புவில் சமரசப் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்த சமயம் இராணுவப் படைகள் வகை தொகையின்றி அப்பாவி தமிழ் மக்களைக் கொன்று குவித்தன.

1985ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி அதிகாலைவேளை வயலூர் மக்கள் மீது தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. இத்தாக்குதலில் 40 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இவ்வயலூரின் தாக்குதலில் விதவையாக்கப்பட்ட – பெயர்குறிப்பிடாத – மூன்று பெண்பிள்ளைகள் உட்பட ஐந்து பிள்ளைகளுக்கு தாயாரான – அவர் கூறும் பொழுது –

இராணுவத்தினரின் வெறியாட்டத்தில் எனது கணவர் கொல்லப்பட்டார். நாங்கள் வயலூரில் கிழங்கு, மாப்பொருள்கள், மரக்கறிவகைகள், பழமரங்கள் செய்கைபண்ணி வாழ்ந்து வந்தோம். ஆனால் எங்களுக்கு சுத்தமான குடி தண்ணீர் வசதி, கடைகள், பாடசாலை, வைத்தியசாலை இருக்கவில்லை.

1985.8.24 ஆம் திகதி அதிகாலை 6 மணியிருக்கும். நான் அடுக்களையில் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தேன். திடீரென ஒரு தொகை மனிதர்கள் துப்பாகியுடன் எமது குடிசைகளை சுற்றி நின்று கொண்டிருப்பதை அவதானித்தேன் .

நான் பீதியடைந்து வந்தவர்களைக் கண்டு மிகப்பயத்தில் நடுங்கினேன். நான் பதற்றப் பட்டி

தொடர்ச்சி ▼

# கிழக்கில் தமிழர் மீதான இனவழிப்பின் ஆரம்பப் புள்ளி வயலூர்க் கிராமத்தின் 40 ஆவது வருட மறைவு தினம்!

## அத்திப்பட்டிபோல அம்பாறையில் அழிக்கப்பட்டு காணாமல் போன குடியிருப்பு

தொடர்ச்சி ▲

ருப்பதைக் கண்டுகொண்ட அவர்கள் என்னை நெருங்கி சிங்கள மொழியில் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டனர். எனக்கு அவை விளங்கவில்லை. அப்பொழுது எனது கணவர் வந்ததால், நட்புணர்வு



சைகைகளைக் காட்டி நாங்கள் தண்ணீர் கொண்டு வரும் வாளியை எடுத்துக் கொண்டு தங்களுடன் வருமாறு கேட்டனர். எனது கணவரும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றார்.

குடிசைகளுக்குள் புகுந்து அங்கு 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் யாவரையும் வெளியில் கொண்டு வந்தனர். வயோதிபர், நோயாளிகள் என்போரை அப்பால் செல்லுமாறு கூறினர். பின் உடல் ஆரோக்கியமான இளைஞர்கள் அனைவரையும் தம்மோடு அழைத்துச் சென்றனர். இதில் பெண்களும் அடங்குவர்.

அங்கிருந்து கிழக்கு திசையாகக் காட்டுப் பாதை வழியாக நாங்கள் நடந்தோம். இராணுவச் சிப்பாய் ஆண்களை அழைத்து தமது காலை ஆகாரத்திற்கும் முகம் கழுவுவதற்கு நீர் கொண்டுவருமாறு கேட்டனர். அப்பொழுது காலை 8 மணியிருக்கும். அவ்வாறே ஆண்கள் தண்ணீர் கொண்டுவந்ததும் சிப்பாய்கள் தமது காலை ஆகாரத்தை சாப்பிட்டனர். ஆனால் நாங்கள் பட்டினியாக இருந்தோம். ஒரு கோப்பை தேனீர் கூட கிடைக்கவில்லை. அவர்கள் தமது காலை ஆகாரத்தை முடித்துக் கொண்டதும் எல்லோரையும் தம்மோடு வருமாறு கூறினர். ஆனால் எங்கே என்று கூறவில்லை.

அவர்கள் கட்டளைக்கு இணங்கி நாங்கள் காட்டுவழிப் பாதை ஊடாக சென்றோம். அப்பொழுது மற்றுமொரு இராணுவச் சிப்பாய்க் குழு ஒன்றைச் சந்தித்தோம். அக்குழுவிற்கு தலைமை தாங்கிய உத்தியோகத்தர் ஆண்களுடன் பெண்களை அழைத்து வந்தமை பிழையெனக் கண்டுகொண்டார். இரண்டாது குழுத் தலைவர் பெண்களிடம் வந்து தமிழிலே பேசினார். அவர் கூறும்போது நீங்கள் ஆண்களுடன் வரவேண்டியதில்லை, இராணுவ வீரர்கள் தமக்கு அறிமுகமற்ற பகுதியில் இருக்கின்றனர், அதனால் எங்களுக்கு ஆண்கள் தேவை, அந்த மரத்தின் கீழ் சென்று மதியம் வரைக் காத்திருங்கள், ஆண்கள் திரும்பிவருவார்கள் என்றார்.

நாங்கள் அந்த மரத்தின் கீழ் காத்திருந்தோம். அவர்கள் குமரன் குளத் திசையில் சென்று கொண்டிருந்தனர். ஆனால் ஆண்கள் திரும்பிவரவில்லை. சூரியகதிர் தலையை சுட்டெரிந்தது. எமது ஆண்கள் திரும்பிவரும் அறிகுறி எதுவும் தென்படவில்லை. வீட்டில் இருக்கும் எமது குழந்தைகளுக்காகவும் இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்ட எமது ஆண்களுக்காகவும் உணவு சமைக்க வேண்டியிருந்தது. எங்கள் குடிசைகளுக்கு திரும்பிவந்து உணவு சமைப்பதில் ஈடுபட்டோம். அப்பொழுது கொலைச் செய்தி வந்தது.

இச் செய்தியை கொண்டு வந்தவர் உயிர் தப்பி வந்தவர். ஏனையவர்கள் குமரன் குளப்பகுதியில் படுகொலை செய்யப்பட்டு வீசப்பட்டு கிடக்கின்றனர் எனக் கூறினார். இச் செய்தியை கேட்டு நாங்கள் அனைவரும் பாதுகாப்புக்காக உடுத்த உடையுடன் நடந்து சென்று திருக்கோவில், பனங்காடு, அக்கரைப்பற்று பிரதேசங்களில் உள்ள உறவினர்களிடம் தஞ்சம் புகுந்தோம். பின் படுகொலை செய்யப்பட்டவர்களை வயோதிபர்கள் அவ் இடத்துக்கு சென்று சடலங்களை பூர்விகக் கிராமத்துக்கு கொண்டுவந்து உரிய மரணச்சடங்குடன் புதைக்கப்பட்டனர். வயலூரில் எங்களின் சொத்துக்கள் யாவற்றையும் இழந்தோம். - என்றார்.

கே.வேலுப்பிள்ளை என்பவர் தனது 2 மகன்களான குழந்தைவேல் ஜெயகாந்தன்,(22) நாகலிங்கம்(22), மற்றும் மருமகன் சின்னவன் கந்தசாமி(30), தனது மூத்த சகோதரன் தம்பிப்பிள்ளை, மாமாவான ஏரம்பு என்பவர்கள் கொல்லப்பட்டனர் என்றார்.

படுகொலையின் போது உயிர் தப்பிய வர்த்தகரான வைரமுத்து கனகசபை பின்வருமாறு கூறினார்:- அடிக்கடி வியாபார நிமித்தம் வயலூருக்குச் செல்லும் நான் 23 ஆம் திகதி பிற்பகல் 2 மாடுகள் பூட்டிய மாட்டுவண்டியை வாடகைக்கு எடுத்துக் கொண்டு திருக்கோவிலில் உள்ள ஞாயிற்றுக்கிழமை சந்தைக்காக பொருள்களை கொண்டு வர வயலூருக்கு போயிருந்தேன். அன்றிரவு மரவள்ளிக் கிழங்குகளைப் பிடுங்குவதற்காக அங்கு தங்கிருந்தேன். 24 ஆம் திகதி காலை



அப்பகுதியை விட்டு புறப்படும் போது அக்குடியிருப்புப் பகுதி முழுவதும் இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டிருந்தது. நான் விவசாயிகளுடன் ஒரு குடிசையில் இருந்தேன். நான் கைது செய்யப்பட்டாலும் பின் விடுவிக்கப்பட்ட போது நான் எடுத்துச் சென்ற பணமும் சைக்கிளும் காணாமல் போயிருந்தன.

இராணுவத்தினர் என்னைச் செல்லுமாறு

தொடர்ச்சி ▼

# கிழக்கில் தமிழர் மீதான இனவழிப்பின் ஆரம்பப் புள்ளி வயலூர்க் கிராமத்தின் 40 ஆவது வருட மறைவு தினம்!

## அத்திப்பட்டிபோல அம்பாறையில் அழிக்கப்பட்டு காணாமல் போன குடியிருப்பு

தொடர்ச்சி▲

சொன்னதால் நான் சென்றேன். ஆனால் குமரன் குளப் பகுதியில் இருந்து சிறிது தூரத்தில் உள்ள இடத்தில் மறைந்திருந்தேன். சிறிது நேரத்தில் துப்பாகி வேட்டுக்கள் கேட்டன. பின் இராணுவத்தினர் தமது வாகனத்தில் சென்ற பின்பு நான் அந்த இடத்துக்குச் சென்று பார்த்தபொழுது அவர்கள் சுடப்பட்டு இறந்து கிடந்தார்கள். ஆயினும் இரு விவசாயிகள் காயத்துடன் கிடந்தனர். ஒருவருக்கு வாய்க்குள் துப்பாகி வைத்து வெடிவைக்கப்பட்டுள்ளது. அவர் இறக்கவில்லை. மற்றவரின் பெயர் நடராஜா.



நான் இச் செய்தியை வயலூருக்குச் சென்று கூறினேன். – என்றார்.

இக்கொடூரத்தில் 40 க்கு மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர் என்பதை கனகசபை உறுதிப்படுத்தினார்.

வயலூர் கிராம விவசாயிகள் படுகொலை செய்யப்பட்டு 23 வருடங்களின் பின்பு 2008ஆம் ஆண்டு தான் முதல் முதலாக இப்படுகொலை பற்றி வெளியுலகுக்கு விவரமாகக் கொண்டு வரமுடிந்தது.

தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் அரசுடன் முதல் முதல் சமாதான பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் தமிழ் மக்களின் ஒரு குடியேற்றத்தை சிங்களப் பேரினவாத அரசின் படையினர் பௌத்த பேரினவாதக் கோட்பாட்டு அடிப்படையில் அழித்தொழித்தனர்.

வயலூர் கிராமம் தமிழ் இன அழிப்பின் ஆரம்ப மையப்புள்ளி என்பதுடன் இது ஒரு கிராமத்தையே அழித்த கறைபடியாத படுகொலை யாகும். இக் கிராமம் இப்போது காடுகளாகிவிட்டது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் சமாதான பேச்சுவார்த்தையின் போது முதல் முதல் நிகழ்ந்த ஒரு படுகொலை.

அம்பாறை மாவட்டத்தில் இவ்வாறான படுகொலைகள் மூலம் பேரினவாத அரசு தமிழ் மக்களின் பூர்வீக தாயகத்தில் பொத்துவில் தொடக்கம் நீலாவணைவரை தங்கவேலாயுதபுரம், பெத்துவில், குண்டுமடு, அக்கரைப்பற்று, திராய்க்கேணி, வீரமுனை, சென்றல்காம்ப், மல்வத்தை, அம்பாறை நகர், காரைதீவு, கல்முனை, நிந்தவூர் போன்ற பல தமிழ்க் கிராமங்கள் அழிக்கப்பட்டன. இராணுவத்தினராலும் ஊர்காவல்படையினராலும் இப் பகுதிகள் சுற்றிவளைத்து சிறுவர், இளைஞர்கள், பெண்கள், முதியவர்கள் என நூற்றுக் கணக்கான தமிழ் மக்களைச் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்தனர். அவர்களது வாழ்விடங்கள் தீ வைத்து எரித்து நாசமாக்கி அழித்தனர்.

இவ்வாறு தமிழ் மக்களின் உரிமை போராட்டத்தில் பல கிராமங்கள் அழிக்கப்பட்டன. இருந்தபோதும் அந்த அழிக்கப்பட்ட வரலாறுகள் வெளியுலகிற்கு கொண்டுவரப்ப டவில்லை. இதனால் தற்போதைய சமூதாயத்துக்கு தமிழ் மக்களுக்கு நடந்த படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே தமிழ் மக்களுக்கு நடந்த படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அந்தந்தக் காலத்தில் அதற்கான நினைவேந்தல்களை செய்யவேண்டும் என்பது தமிழர்களின் கடமையாகும்.

இந்த மாவட்டத்தில் ஆட்சியாளர்களால் அட்டவணை போட்டு நடாத்தப்பட்ட தமிழின அழிப்பின் ஆரம்ப புள்ளியாக பறைசாற்றி நிற்கின்றது வயலூர் என்பதை அனைவரும் உணர்ந்து, அதற்கான செயற்பாடுகளைச் செய்யவேண்டும்.

# ஜனாதிபதிக்கான ஒதுக்கத்தையே ரணில் விக்கிரமசிங்க செலவிட்டார்

## வஜிர அபேவர்தன தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சர்ச்சைக்குரிய வெளிநாட்டு பயணத்துக்காக செலவிடப்பட்ட பணம், பாதீட்டின் கீழ் ஜனாதிபதியின் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் இணைந்து நேற்று ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜனாதிபதியாக இருந்தபோது ரணில் விக்ரமசிங்க மேற்கொண்ட இந்த பயணத்துக்காக செலவிட்ட பணம், ஜனாதிபதியின் செலவுக்காக ஒதுக்கப்பட்ட பணமே, வேறு ஒதுக்கத்தில் அல்லாத பணம் அல்ல.

இந்த செலவுகள் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகம் அலுவலகம் கணக்காய்வுகளை மேற்கொண்டது.

இந்த கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளர் நாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலும் கூட, அவ்வாறான பிரச்சினைகள் குறித்து எந்தவித குறிப்புகளும் இடம்பெறவில்லை.” என்று தெரிவித்துள்ளார்.

# இந்திய வான்பரப்பில் பாகிஸ்தான் விமானங்கள் பறப்பதற்கு விதிக்கப்பட்ட தடை மேலும் நீடிப்பு



இந்திய வான்பரப்பினை பாகிஸ்தான் பயன்படுத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்திய வான்பரப்பினை பாகிஸ்தான் பயன்படுத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை எதிர்வரும் செப்டெம்பர் 24 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பஹல்காமில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து, கடந்த மே மாதம் ஒபரேஷன் சிந்தூர் எனும் ராணுவ நடவடிக்கையின் மூலம் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் ஆகிய பகுதிகளில் அமைந்திருந்த பயங்கரவாத முகாம்களின் மீது இந்தியா தாக்குதல் நடத்தியது.

இதனைத் தொடர்ந்து, இந்தியா – பாகிஸ்தான் இடையில் போர் தொடங்கியதுடன், இருநாடுகளும் தங்களது வான்மார்க்கத்தினை மூடின.

மேலும், இருநாடுகளிலும் வசித்து வந்த இந்தியர்கள் மற்றும் பாகிஸ்தானியர்கள் தங்களது நாடுகளுக்கு வெளியேற்றப்பட்டனர்.

அத்துடன், இந்திய வான்பரப்பில் பாகிஸ்தானின் பயணிகள் மற்றும் போர் விமானங்கள் ஆகியவை நுழைவதற்கு மத்திய அரசு தடை விதித்து உத்தரவிட்டிருந்தது. இந்தத் தடையானது, கடந்த மே மாதம் அமல்படுத்தப்பட்டதுடன், தொடர்ந்து நீட்டிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்தத் தடையானது வரும் செப்டம்பர் 24 ஆம் திகதி வரை நீட்டிக்கப்படுவதாகவும், அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே பாகிஸ்தான் வான் வழியில் இந்திய விமானங்கள் பறக்க விதிக்கப்பட்டுள்ள தடையும் செப்.டெம்பர் 24 ஆம் திகதி வரை நீட்டிக்கப்படுவதாக பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# தெருநாய்கள் தொடர்பான சர்ச்சைக்குரிய தீர்ப்பை மாற்றியமைத்த உயர் நீதிமன்றம்!




தெருநாய்களை வேறு இடத்திற்கு மாற்றுவது தொடர்பாக ஆகஸ்ட் 11 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இந்திய உயர் நீதிமன்றம் மாற்றியமைத்தது.

அதன்படி, தடுப்பூசி மற்றும் கருத்தடைக்குப் பின்னர் தெருநாய்களை அதே இடங்களுக்கு மீண்டும் விடுவிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

3 நீதிபதிகள் கொண்ட அமர்வு, அனைத்து மாநிலங்கள் மற்றும் நகராட்சி பிரதேசங்களுக்கும் பொருந்தும் வகையில், இந்தியா முழுவதும் இந்த விடயத்தின் நோக்கத்தை விரிவுபடுத்தியுள்ளதாகவும் கூறியது.

நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா மற்றும் என்.வி. அஞ்சாரியா ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்த உத்தரவு ரேபிஸ் (விசர்) நோயால் பாதிக்கப்பட்ட நாய்களுக்குப் பொருந்தாது என்று தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

அதேநேரம், நாய்களுக்கு பொதுவில் உணவளிக்க அனுமதிக்கப்படாது என்றும், தெருநாய்களுக்கு உணவளிக்க பிரத்யேக இடங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தெருநாய்களுக்கு உணவளிக்கும் பிரத்யேக இடத்தை உருவாக்க நகராட்சி அதிகாரிகளை கேட்டுக் கொண்டது.

டில்லி மற்றும் தேசிய தலைநகர் பிராந்தியம் முழுவதும் உள்ள வீதிகள் இருந்து அனைத்து தெருநாய்களையும் அகற்றுமாறு கடந்த ஆகஸ்ட் 11 அன்று இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு உத்தரவு பிறப்பித்தது.

ஓகஸ்ட் 11 அன்று உயர் நீதிமன்றம், தெருநாய்களை கருத்தடை செய்த பின்னர் அவற்றின் வாழ்விடத்திற்குத் திரும்பக் கொண்டுவரக்கூடாது என்று குறிப்பாக உத்தரவிட்டது.

எனினும், இந்த உத்தரவுக்கு எதிரான சீற்றத்திற்கு மத்தியில், ஓகஸ்ட் 14 அன்று மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு உத்தரவை ஒத்திவைத்தமையும் குறிப்பிடத்தக்கது.



# மசகு எண்ணெய் உற்பத்தி ஆலையில் வெடி விபத்து; அமெரிக்காவில் பதற்றம்

அமெரிக்காவின், லூசியானாவில் உள்ள ஒரு மசகு எண்ணெய் உற்பத்தி ஆலையில் வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மசகு எண்ணெய் உற்பத்தி ஆலையில் இருந்து வெளியேறும் நச்சுப் புகை காரணமாக, அருகிலுள்ள குடியிருப்பாளர்கள் சுவாசப் பிரச்சினைகளை சந்திப்பதாக வெளிநாட்டு ஊடகங்கள் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்மிதிஸ் சப்ளை என்பது மசகு எண்ணெய் மற்றும் வாகன எண்ணெய்களை உற்பத்தி செய்யும் ஒரு நிறுவனம் ஆகும்.

ஆலையில் இருந்து வெளியேறும் நச்சுப் புகை காரணமாக அருகில் உள்ள நெடுஞ்சாலை மற்றும் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ரஷ்யா – உக்ரைன் விவகாரத்தை தீர்ப்பது கடினமாக உள்ளது என்கின்றார் டொனால்ட் ட்ரம்ப்

உலகில் 7 போர்களை நிறுத்திய தனக்கு, ரஷ்யா மற்றும் உக்ரைன் விவகாரத்தை தீர்ப்பது கடினமாக உள்ளது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய இரண்டு நாடுகளுக்கு இடையே போர் நிறுத்தத்தை கொண்டு வர வேண்டும் என்று முனைப்புடன் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டரம்ப் பல கட்ட பேச்சு வார்த்தைகளை நடத்தினார்.

எனினும், இரண்டு நாடுகளுக்கும் இடையில் இதுவரை எவ்வித தீர்வும் எட்டப்படவில்லை.

இந்த நிலையில், உலகில் 7 போர்களை நிறுத்திய தனக்கு, ரஷ்யா



மற்றும் யுக்ரைன் விவகாரத்தை தீர்ப்பது கடினமாக உள்ளது என ட்ரம்ப் கூறியுள்ளார்.

புட்டினும், ஸெலன்ஸ்கியும் இணைந்து செயல்படுவார்களா என்று தாங்கள் எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிப்படையான காரணங்களுக்காக அவர்கள் பேச வேண்டியுள்ளது. அந்த சந்தர்ப்பத்தில் தாமும் அந்த பேச்சு வார்த்தையில் இருக்க வேண்டுமா என்பது குறித்து பின்னர் தீர்மானிக்கலாம் எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அத்துடன், புட்டினும் ஸெலன்ஸ்கியும் சந்திக்க வேண்டும் என்று தாம் விரும்புவதாகவும் ஆனால் அவர்கள் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு மக்களை கொலை செய்வதாகவும் ட்ரம்ப் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது மிகவும் முட்டாள்தனமான காரியம் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

# புடினுடனான சந்திப்பை ரஷ்யா தடுக்கின்றது

## ஜெலன்ஸ்கி குற்றச்சாட்டு

போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக விளாடிமிர் புடினுடனான சந்திப்பைத் தடுக்க ரஷ்யா, தம்மால் முடிந்த அனைத்தையும் செய்வதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இரண்டு தலைவர்களையும் ஒன்றிணைக்க முயன்றார்.

எனினும் அது எண்ணெய் மற்றும் வினிகர் போன்று இணைந்து செல்லவில்லை என்று ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.



முன்னதாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ், உச்சி மாநாட்டிற்கு நிகழ்ச்சி நிரல் தயாராக இருப்பதாக கூறியபோதும் இறுதியில் அவ்வாறான நிகழ்ச்சி நிரல் இருக்கவில்லை என்றும் ஜெலன்ஸ்கி சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தநிலையில் ரஷ்யாவை போன்று உக்ரைன் எந்த சந்திப்புக்களையும் கண்டு பயப்படுவதில்லை என்றும் ஜெலன்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை உக்ரைனுக்கு சென்றுள்ள நேட்டோ அமைப்பின் பொதுச் செயலாளர் மார்க் ருட்டே, தற்போதைய முட்டுக்கட்டையை உடைக்க ட்ரம்ப் இலக்கு வைத்துள்ளார் என தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.08.2025




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாளாக அமையும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். உங்கள் இலக்குகளை நீங்கள் அடைவீர்கள்.

இன்று உங்களின் பெரும்பான்மையான ஆற்றலைப் பயன்படுத்துவீர்கள். அது உங்கள் பணியில் பிரதிபலிக்கும். உங்களின் தனித் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக அதே சமயம் நகைச்சுவை உணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே புரிந்துணர்வும் நல்லிணக்கமும் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்களின் உற்சாகமான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் அனுகூலம் குறைந்து காணப்படும். வெற்றியைப் பெற பொறுமை அவசியம். நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரலாம். எனவே திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். எவ்வளவு கடினமாக உழைத்தாலும் பலன் இருக்காது. உங்கள் பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடனான உறவு குறித்து பெரியவர்கள் ஆலோசனை வழங்கினாலும் நீங்கள் கேட்கும் மனநிலையில் இருக்க மாட்டீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையில் மோதல்கள் ஏற்படும்.

இன்று பயணத்தின் போது பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. நீங்கள் பணத்தை கவனமுடன் கையாளவும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. தேவையற்ற விஷயங்களுக்கு பதட்டமடைவீர்கள் அதனை தவிர்த்து உற்சாகமாக இருக்க வேண்டியது அவசியம்.

பணியில் நல்ல பெயர் எடுப்பதற்கான சாத்தியம் இல்லை. இதனால் உங்களுக்கு வருத்தம் ஏற்படும். உங்கள் சகபணியாளர்களை நண்பர்கள் போல கருதிப் பழக வேண்டும்.

உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையுடன் சுமூக உறவு கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அப்பொழுதுதான் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

சம்பாதித்த பணத்தை இன்று குடும்பத்திற்காக செலவு செய்வீர்கள். பணத்தை அதிகமாக சம்பாதிப்பதற்கும் சேமிப்பதற்கும் வாய்ப்பு குறைவு.




இன்று வெற்றிகரமான நாளாக அமையும். உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்களிடம் அதிக ஆற்றல் மற்றும் விழிப்புணர்வு காணப்படும்.அவை உங்களின் வெற்றிக்கு வழி வகுக்கும்.

உங்கள் பணியில் உங்களுக்கு திருப்தி கிடைக்கும். பணிகளை தன்னிச்சையாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு சிறப்பாக இருக்கும்.

இன்று ஆரோக்கியத்தை சிறப்பாக பாரமரிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக திடமாக இருப்பீர்கள்.




இன்று மன உளைச்சல் காணப்படும். பாடல்கள் கேட்பது அல்லது திரைப் படங்கள் பார்ப்பது போன்ற நிகழ்ச்சிகள் மூலம் மனதில் மகிழ்ச்சி ஏற்படுத்திக் கொள்ளலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று பணிகள் மலை போல் குவிந்து கொண்டே இருக்கும். இதனால் கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதில் தாமதங்கள் காணப்படும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அதிக பணம் சேர்ப்பதற்கு குறைந்த வாய்ப்புகளே காணப்படும்.

ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது.




இன்று நற்பலன்கள் கூடுதலாக கிடைக்கும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும். சிறிய முயற்சிகள் கூட இன்று வெற்றியை அளிக்கும்.

நீங்கள் செய்யும் பணியில் சிறப்பான வளர்ச்சி பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் அவரை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இன்று பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இதனால் உங்கள் வருமானம் உயரும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்திருக்கும்.




கூடுதல் பொறுப்புகள் காரணமாக இன்று உங்கள் செயல்களை செய்வது கடினமாக உணர்வீர்கள். இன்று அமைதியின்மை காணப்படும். நேர்மறை எண்ணம் மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம்.

இன்று பணிச்சுமைகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகள் காணப்படும்.

கருத்து வேறுபாடு காரணமாக துணையுடன் மோதல்கள் காணப்படும். இருவரும் மகிழ்ச்சியாக இருக்க இந்த வேறுபாடுகளை களைவது சிறந்தது. புத பகவான் உறவின் நல்லிணக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்துவார்.

இன்று அதிக பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக காணப்படும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். என்றாலும் உறுதியும் ஈடுபாடும் தடைகளை வெற்றிப் படிகளாக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இந்தப் பயணம் உங்களுக்கு மகிழ்ச்சிகரமானதாக அமையாது. விரும்பத்தாகத தருணங்களை சந்திக்க நேரும்.

உங்கள் துணையுடம் அமைதியாக மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். மகிழ்ச்சியை பராமரிக்க உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். எனவே சம்பாதிக்கும் பணத்தைக் கொண்டு மகிழ்ச்சி அடையும் நிலை காணப்படாது.

இன்று பதற்றம் காணப்படும். நீங்கள் அதிகப்படியாக வருத்திக் கொள்ள வேண்டாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.08.2025




இன்றைய நாளில் அனுகூலம் சற்று குறைந்து காணப்படும். நீங்கள் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று எதையோ இழந்தது போல உணர்வீர்கள்.

பணிகளைப் பொறுத்த வரை இன்று சற்று கடினமாக காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு குறைந்து காணப்படும்.

நகைச்சுவை அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணத்தை கடனாக வாங்குவீர்கள். அதன் மூலம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள் வீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங் களிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும்.




இன்று அமைதியுடன் இருக்க நீங்கள் தைரியம் மற்றும் உறுதியுடன் நம்பிக் கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த் துக்கொள்ள நீங்கள் நேர்மறை எண் ணத்துடன் இருக்க வேண்டும்.

அதிகமான பணிகள் காரணமாக இன்று நீங்கள் ஓய்வின்றி வேலை செய்வீர்கள். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற விவாதங்களை தவிர்க்க வேண்டும். உங்களின் மன நிலை தான் எல்லா வற்றிற்கும் காரணம் என்பதால் மனதை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளன. வீண் விரயங்கள் காணப்படும்.




இன்று எதிர்பாராத நன்மைகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தி அளிக்கும். விருந்தினர் வருகை உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். இதனால் மகிழ்ச்சி யாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காத்திருக்கும். பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். இன்று மகிழ்ச்சியுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் அன்பை நிரூபித்துக் காட்டு வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக வளர்ச்சி பெறும். இன்று உங்களின் கடின உழைப்பிற்காக ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் வகையில் பணவரவு காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும் இன்று நீங்கள் தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




நீங்கள் அறிவு பூர்வமாக செய லாற்றுவதன் மூலம் இன்று எழும் பிரச்சினைகளைக் கையாள இயலும். இன்றைய நாளைச் சாதகமாக்கிக் கொள்வது உங்கள் கையில் தான் உள்ளது.

சிறப்பாக பணியாற்றுவதற்கு இன்றைய நாள் அனுகூலமாக இருக்காது. பணிகள் அதிகமாக இருக்கும் என்பதால் முறையாக திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயத்தை கூட பெரிய அளவில் காண்பீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியான போக்கு சிறந்தது.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். பொறுப்புகள் அதிகமாக காணப்படுவதால் கையில் பணம் குறைவாக காணப்படும்.

# அடக்குமுறைக்குத் தயாராகாதீர் பொறுமைக்கும் எல்லையுண்டு

## நாமல் ராஜபக்ஷ எச்சரிக்கை

அரசாங்கம் இனிமேல் அடக்கு முறைக்குத் தயாராகக் கூடாது என்றும் தங்களது பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு எனவும் நாடாளு மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அளுத்கமவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று ஊடகங் களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்த நேரத்தில் அரசாங்கத்தின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை மறைக்க அரசியல் கைதுகள் மேற் கொள்ளப்படுகின்றன எனவும் நாமல் ராஜபக் ஷ குற்றஞ்சாட்டினார்

ஒரு அரச தலைவரை கைது செய் வதன் மூலம் நாட்டின் பிரச்சினைகள் தீர்க்கப்படாது என்றும் ஜே.வி.பி. தலை



வர்கள் பாதுகாக்க ஒரு தலைமுறை யோ அல்லது பாதுகாக்க ஒரு நாடோ இல்லை என்றும், தங்களுக்கு பாதுகாக்க ஒரு தலைமுறையும், பாதுகாக்க ஒரு நாடும் இருப்பதாகவும் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.